**சாட்சிகளின் வாக்குமூலம்.**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.**

**அசல் வழக்கு எண்.32/2011**

| | | | | |
|---|---|---|---|---|
| வாக்குமூலம் | - **வா.சா.1** | தொடங்கும் நேரம் | : | 12.24 p.m. |
| | | முடிவுறும் நேரம் | : | 12.36 p.m. |
| பெயர் | : குமார் | மதம் | : | -- |
| த/பெ. | : சின்னையா | தொழில் | : | -- |
| கிராமம் | : குடிசைக்கரை | வயது | : | **60** |
| தாலுக்கா | : வந்தவாசி | நாள் | : | **16-09-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **16**ஆம் நாள் சாட்சியம்.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ஆம் வாதியாவேன். 1ஆம் வாதி எனது தாயார் ஆவார். அவருக்காகவும் சேர்த்து முதல் விசாரணைக்காக முதன்மை சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படிக்க கேட்டு கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **26.02.1996** | **தேதியிட்ட 2ஆம் வாதியின் தகப்பனார் மற்றும் 1ஆம் வாதியின் கணவரான சின்னையா என்பவர் பெயரில் உள்ள மனை வரி தோராய பட்டா. (பட்டா எண்.92) - அசல்** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **04.03.1999** | **தேதியிட்ட கிரய ஆவணம் - அசல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **19.02.2005** | **தேதியிட்ட 2ஆம் வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது - அசல்.** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **--** | **2ஆம் வாதியின் தகப்பனார் மற்றும் 1ஆம் வாதியின் கணவரான சின்னையா என்பவர் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை.** | **வா.த.சா.ஆ.4.** |

**மேற்படி வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன்.**

27.01.2023 தேதியிட்ட வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை **நீ.ம.த.சா.ஆ.1.**

27.01.2023 தேதியிட்ட வழக்கறிஞர் ஆணையர் வரைபடம் **நீ.ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு வாய்தாவிற்கு ஒத்தி வைக்கப்படுகிறது**.

ஒம்/- செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.